Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 127/2026** |
| Deposition of witness for | :: | **PW. 4** |
| Name | :: | **சண்முகராஜ் (சிறப்பு சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**

**03.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனு தாக்கல் செய்துள்ளதாலும் இவ்வழக்கின் அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், புலன் விசாரணை அதிகாரியான ரவிஈஸ்வரன் அவர்கள் தற்போது பணிஓய்வு பெற்று வெளியூரில் வசித்து வருவதாலும் நீதிமன்ற கால விரயத்தினை கருத்தில் கொண்டு மேற்படி புலன் விசாரணை அதிகாரிகளின் விசாரணை நடைமுறை பற்றி நன்கு தெரியும் என்பதால் வழக்கு கோப்பினை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 07.11.2025 ம்தேதி அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளர் முருகன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த அசா,1 விஜய்ஆனந்த் என்பவர் கொடுத்த புகார்மனுவினை பெற்று இரவு 08.00 மணிக்கு நிலையம் வந்து

நிலைய குற்ற எண். 398/2025 சட்டப்பிரிவுகள் 296(b), 118(1). 351(3) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(புகார் மனு அசாஆ. 3 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**. மேற்படி அசல் புகார்மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும் விசாரணை வேண்டி சார்பு ஆய்வாளர் ரவிஈஸ்வரன் அவர்கள் வசம் ஒப்படைத்துள்ளார்.

3. சார்பு ஆய்வாளர் ரவிஈஸ்வரன் அவர்கள் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே இரவு 09.00 மணிக்கு சம்பவ இடமான அருப்புக்கோட்டை திருநகரம் கொண்டலம்மன் கோவில் அருகே சென்று சாட்சிகள் ராஜேந்திரன், மோகன் ஆகியோர்கள் முன்னிலையில் டார்ச் லைட் மற்றும் தெருவிளக்கு வெளிச்சத்தில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், மாதிரி வரைபடம் ஆ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

**4.** பின்னர் அன்றைய தினம் புகார்தாரர் விஜய்ஆனந்த் சாட்சிகள் முத்துபெருமாள், செண்பகரத்தினம், சந்திரசேகரன், சண்முகபெருமாள் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர் இவ்வழக்கின் விசாரணையில் முதல் தகவல் அறிக்கையில் எதிரியாக சொல்லப்பட்டுள்ள சரவணன் என்பவர் வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பது தெரிய வந்ததால் மேற்படி எதிரியை இவ்வழக்கில் இருந்து நீக்கி எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **(எதிரி நீக்கல் அறிக்கை அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**6.** பின்னர் இவ்வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மையென தெரிய வந்து எதிரியை தேடி வந்த நிலையில் 08.11.2025 ம் தேதி மதியம் மலையரசன் கோவில் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து 12.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து நிலைய பாரா வசம் ஒப்படைத்து பின்னர் தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்

7. பின்னர் 20.11.2025ம் தேதி அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம்பட்ட விஜய் ஆனந்த் என்பவருக்கு சிகிச்சை அளித்த மேற்படி மருத்துவமனை மருத்துவர் சோமமூர்த்திநாகராஜன் அவர்களை விசாரித்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்று பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **( விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

**8.** பின்னர் அன்றைய தினம் மருத்துவர் வழங்கிய காயசான்றின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 296(b), 118(1). 351(3) BNSல் இருந்து 296(b), 118(2). 351(3) BNS ஆக பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

9. பின்னர் அன்றைய தினம் சார்பு ஆய்வாளர் ரவிஈஸ்வரன் அவர்கள் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மணிகண்டன் மீது சட்டப்பிரிவுகள் 296(b), 118(2). 351(3) BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 னிடம் சார்பு ஆய்வாளர் அவர்கள் புகார் மனுவைப்பெற்று வழக்கினை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் நேரத்தில் காவல் ஆய்வாளர் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**